கீழே உள்ள படத்திற்கு வண்ணம் தீட்டிவிட்டு பாடலை பாடவும்:



# அணில்

அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா

கொய்யாமரம் ஏறிவா
குண்டுப்பழம் கொண்டுவா

பாதிப்பழம் என்னிடம்
மீதிப்பழம் உன்னிடம்

கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

கீழே உள்ள படத்திற்கு வண்ணம் தீட்டிவிட்டு பாடலை பாடவும்:


www.tamiltoddlers.com

# வாத்து

குவா குவா வாத்து
குள்ள குள்ள வாத்து
மெல்ல உடலை சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
மெல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து

கீழே உள்ள படத்திற்கு வண்ணம் தீட்டிவிட்டு பாடலை பாடவும்:



# பூனை

மியாவ் மியாவ் பூனை
மீசைக்கார பூனை
ஆளில்லாத நேரத்தில்
பாலை தயிரை திருடுமாம்.

கீழே உள்ள படத்திற்கு வண்ணம் தீட்டிவிட்டு பாடலை பாடவும்:



www.tamiltoddlers.com

# நிலா

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா
வட்ட வட்ட நிலாவே
வண்ண முகில் பூவே
பட்டம் போல பறந்து வா,
பம்பரம் போல சுற்றி வா

www.tamiltoddlers.com

கீழே உள்ள படத்திற்கு வண்ணம் தீட்டிவிட்டு பாடலை பாடவும்:



www.tamiltoddlers.com

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்
என்னால் உனக்குத்தொல்லை
ஏதும் இங்கே இல்லை
ஐயம் இன்றிச் சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அஃதே எனக்கு வழியாம்